தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 31, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 மே 14, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

இனிமையான சொற்கள் இருக்க அவற்றைச் சொல்லாமல் கடுமையான சொற்களைச் சொல்வது பழத்தை விடுத்து காயைப் பறித்து உண்பதற்கு ஒப்பாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 484, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

484—

குடிநீர் வசதி

***5895—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 மே 14

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு நகராட்சிக்கு தற்பொழுது பாலாற்றிலிருந்து நாளொன்றுக்கு 4.40 மில்லியன் லிட்டர் குடி தண்ணீர் வழங்கப்படுகிறது. இதுமட்டுமின்றி, உள்ளூர் நீராதாரங்களைக் கொண்டும், தனி மின்விசைத் திட்டங்கள் மற்றும் கைப் பம்புகள்மூலமும் குடிநீர் வழங்கப்படுகிறது. ஆற்காடு நகராட்சியின் எதிர்கால குடிநீர்த் தேவையைக் கருத்தில்கொண்டு, வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, ஆற்காடு உள்ளிட்ட 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறத்தக்க வகையில் மேட்டூர் அணை கீழ்ப்புறம் செக்கானூர் அருகே காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ரூ.1,295 கோடியில் செயல்படுத்த அரசின் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *இத்திட்டப் பணிகளை 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நலனில் அதிக அக்கறை கொண்டு தமிழக மக்களுக்காக வாழ்ந்து, வாழ்க்கை என்னும் ஓடத்தில் விழியிழந்தோருக்கு நல்ல வழியாகவும், வாழ்வு இழந்தோருக்கு நல்ல வழிகாட்டியாகவும் திகழ்ந்து தமிழகத்தைக் கட்டிக் காத்து நல்லாட்சி நடத்தி வரும் மனிதப் புனிதர், மாணிக்கத் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமர்ந்திருக்கும் திசைநோக்கி எனது பணிவான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.*

சட்டமன்ற வரலாற்றில் தினந்தோறும் விதி 110—ன்கீழ் முத்தான திட்டங்களை அறிவித்து, தமிழக மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி, அதில் ஆற்காடு தொகுதிக்கு எண்ணற்ற திட்டங்களை அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் சார்பாகவும், ஆற்காடு தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றியினை சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா! கடந்த 9—5—2013 அன்று ஆற்காடு நகரத்தில் பொது மக்களின் பங்களிப்பைக் கொண்டு, ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக முதன்முறையாக மின்சாரம் தயாரிக்கும் பணியினை மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் துவக்கி வைத்து, நல்லாசியுடன் அப்பணியினை துரிதப்படுத்திய எங்களின் பொன்மனத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், ஆற்காடு நகர மக்கள் சார்பாகவும் மீண்டும் ஒரு முறை நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்றார் ஏசுபிரான். ஆற்காடு நகர மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை, தவித்த வாய்க்குத் தண்ணீர் தந்ததுபோல, மனித தெய்வமாக வாழ்ந்துவரும் அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் தாகம் தீர்க்க, காவேரி நீரை ஆற்காடு நகரத்திற்குக் கொண்டுவந்து நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்ட இன்றைய தமிழகம், நாளைய பாரதமே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசியலின் சரித்திரத்தை துணிவுடன் மாற்றும் எங்கள் மாமேதையே, தங்களால் தமிழகம் சுடர்விடும் தீபமாக, இருள் அகற்றும் ஒளியாகக் காட்சி தருகிறது. எத்தனை நாள் இந்த ஏக்கம், எத்தனை நாள் இந்த ஆக்கம், எத்தனை நாள் இந்த ஊக்கம், இன்று காணும் வெற்றியெல்லாம் அன்னையின் அறவழியில் செல்வதாலன்றோ! என்று கூறி, நன்றியுடன் அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் படிப்படியாக வழங்கப்படும் எனத்*

தெரிவித்தார்கள். அதற்கான பணி எவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும், குறிப்பாக தமிழக முழுமைக்கும் உள்ள அரசு மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், பள்ளிக்கூடங்களுக்கு முதற்கட்டமாக முன்னுரிமை கொடுத்து பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—05

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பொதுவான கேள்வியை எழுப்பி அமர்ந்திருக்கிறார். பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையில்தான் இந்த மூன்று நிதிநிலை அறிக்கைகளிலேயும் பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக, வறட்சி மிகுந்த மாநிலமாக இருக்கின்ற காரணத்தினால், நீராதாரங்கள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளிலிருந்து, நீராதாரங்கள் இல்லாத பகுதிகளுக்கு தண்ணீரை எடுத்துச் செல்லக்கூடிய வகையிலே பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, அதன் மூலமாக அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்படும், ஒன்று.

இரண்டாவது, மருத்துவமனை மற்றும் பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்று கோரியிருக்கிறார். அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற நகராட்சிகள், பேரூராட்சிகளில் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள், அரசுத் துறை அலுவலர்கள் ஆகியோர் மருத்துவமனைக்கோ அல்லது பள்ளிகளுக்கோ குடிதண்ணீர் தேவை என்று அறிக்கையாக வைப்பார்கள் என்று சொன்னால், அதை ஆய்வு செய்து அந்தந்தப் பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 மே 14]

ஏற்கெனவே, பள்ளிகளைப் பொறுத்தவரையில், எல்லா இடங்களிலும் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாதபட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அதற்காகவே எங்கள் துறையில் 100 கோடி ரூபாய் தனியாக ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதன்வாயிலாக எல்லாப் பள்ளிகளுக்கும் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகராட்சி 18—வது வார்டைச் சேர்ந்த கச்சவராயன் திடல், கச்சவராயன் திடல் தமிழர் தெரு, பாமரம்மன் கோயில் தெரு ஆகிய மூன்று தெருக்களுக்கும் திருத்துறைப்பூண்டியிலிருந்து கொள்ளிடம் குடிநீர் வருகிறது. இந்தக் குழாய்கள் திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் இரயில்வே லைனைக் கடந்து செல்லும்போது, இந்தப் பகுதி மேடாக இருக்கிற காரணத்தினால், போதிய அளவு தண்ணீர் வராத பிரச்சினை இருக்கிறது. ஆகவே, அங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, நீர் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி அந்த மூன்று தெருக்களுக்கும் குடிதண்ணீர் வரவில்லை என்று சொன்னால், நிச்சயமாக ஆய்வு செய்து, அங்கே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, அந்தப் பகுதிகளுக்கு நீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.